7th September 1959]

Sri S. LAZAR : லேபர் கோர்ட், லேபர் ட்ரிப்யூனல் மூலம் தொழிலாளர்களுக்குச் சாதகமான தீர்ப்புகள் கிடைக்கும்போது அதைப் பார்த்து அப்பீல் செய்கிற காலத்தில் சம்பளம், போனஸ் இது போன்ற காரியங்களைப் பொறுத்தாவது "ஸ்டே" கொடுக்க முடியாத நிலைமையை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இன்றைக்கு நம்முடைய சட்டத்தின் கீழ் அப்பீலே கிடையாது. ஹைகோர்ட்டுக்கு ரிட் ஜூரிஸ்டிக்ஷன் மூலமாகவும், சுப்ரீம் கோர்ட்டுக்கு ஆர்டிகிள் 136 மூலமாகவும்தான் போக முடியும். 1950-ம் வருஷத்தில் அப்பீல் செய்து இந்தச் சட்டத்தின்படி "ஸ்டே" கொடுப்பது பற்றி சில விதிகள் போடப்பட்டிருந்தன. ஆனால் அந்தச் சட்டம் இன்றைக்கு ரத்தாகி விட்டது. மீண்டும் அப்பீல் ட்ரிப்யூனல் வைக்கலாமா என்ற விஷயம் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. அப்பொழுது இந்த யோசனைகள் எல்லாம் கவனிக்கப்படும்.

Binny Engineering, Limited

*176 *Q*.—Sri S. PAKKIRISWAI PILLAI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) பின்னி என்ஜினியரிங் கம்பெனியிலே 1959-ம் ஆண்டு மே மாதத்தில் முதலாளிகள் கதவடைப்பு செய்தனரா ?

(ஆ) இக் கதவடைப்பை நீக்க இந்த அரசாங்கத்தார் என்ன முயற்சிகள் எடுத்துக்கொண்டனர் ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) A settlement was reached between the parties on 21st May 1959 and the workers resumed work as per the settlement. In view of the voluntary settlement, the question of Government intervention did not arise.

Sri S. PAKKIRISAMI PILLAI : இந்தச் சட்டத்தினுடைய விவரத்தைத் தயவு செய்து சொல்ல முடியுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இது தனியாக முதலாளிக்கும், தொழிலாளர்களும் செய்து கொண்டது. இது சர்க்கார் முன்பு செய்து கொள்ளப்படவில்லை. அதனால் சர்க்காரிடம் எந்தத் தகவலும் இல்லை.

Employees' State Insurance Scheme

*182 *Q*.—Sri T. SAMPATH (on behalf of Sri V. SANKARAN : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வேலையாள்கள் ராஜ்ய இன்ஷூரன்ஸ் திட்டத்திலிருந்து விலக்கு அளிக்கும்படி மேட்டூர் மின்சாரத் தொழிலாளர்கள் சங்கம் நிறைவேற்றிய தீர்மானங்களின் நகல் அரசாங்கத்தாருக்குக் கிடைத்துள்ளதா ?

(ஆ) அப்படியானால், அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ள உத்தேசித்திருக்கிறது ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The Government have exempted the Mettur Workshop and Mettur Power House from the operation of the Employees' State Insurance Act except Chapter V-A thereof for a period of one year with effect from 10th June 1959.

Mr. SPEAKER : We shall now take up question No. 177 put by Sri N. K. Palanisami to be answered by the Hon. Minister for Local Administration.

[7th September 1959

THE HON. SRI R. VENKATARAMAN : I request that this question may be taken up to-morrow, Sir.

MR. SPEAKER : Yes, this will be taken up tomorrow.

Questions are over, though the time allotted for questions is not yet over. Several questions had to be postponed as the Hon. Home Minister and the Hon. Finance Minister hatve not come back from Delhi.

II.—GOVERNMENT BILL.

THE MADRAS HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS BILL, 1959 (L.A. BILL NO. 7 OF 1959)—*cont.*

MR. SPEAKER : We shall now continue the general discussion on the Madras Hindu Religious and Charitable Endowments Bill, 1959.

I suppose the Hon. Minister for Industries would like the Minister's reply to be made to-morrow after the return of the Home Minister. Or, would the Hon. Minister for Industries himself reply to the debate to which I have no objection.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, I am ready to reply to the debate. But if hon. Members want to speak and take the whole day for themselves, the Minister in charge will come to-morrow and the first item after questions to-morrow may be his reply.

MR. SPEAKER : We shall decide that later in the course of **the day.** ஸ்ரீமதி குழந்தையம்மாள் இன்னும் பேசி முடிக்கவில்லை. தொடர்ந்து அவர்கள் பேசட்டும்.

* SRIMATHI **KOLANTHAI AMMAL** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்து மதப் பாதுகாப்புச் சட்டத்தை அனுசரித்து சனிக்கிழமை பேசிய பேச்சுடன் தொடர்ந்து ஒரு சில குறிப்புகளைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய மதாசாரக் கொள்கைகளைப் பெரிய நகரங்களில் இருந்து சிறு கிராமங்கள் வரை பரப்புவது நம்முடைய கடமையாகும். ஏனென்றால், வெறும் தனிப்பட்ட கல்வியை மட்டும் நாட்டிலே பரப்புவோமேயானால், மக்களுடைய பண்பாட்டை நல்ல முறையிலே வளர்க்க முடியாது. ஆத்மீகக் கோரிக்கைகள் நாட்டிலே குறைந்து போய்விடும். அந்த முறையிலே நிறைந்த கற்றறிந்தவர்கள் பெரும் பட்டம் பதவிகளைப் பெற்றவர்களாக இருந்தபோதிலும் அவர்கள் ஓரளவு அமைதியுடன் வாழ்க்கையை நடத்தக்கூடியவர்களாக இல்லையென்பதைத்தான் நாம் பார்க்கிறோம். அந்த முறையிலே அலைகின்ற உயிரானது ஆன்ம ஞானத்தை அறியச் செய்ய, நம்முடைய தெய்வாலயங்களும், மடாலாயங்களும் நல்ல ஒரு பிரசார சேவையைச் செய்ய வேண்டும். அதற்குச் சிறு சிறு நூல்களை அச்சிடவும், அந்த நூல்களைக் கிராமப் பகுதிகளிலும், நகரங்களிலும், சிறந்த கல்வி அறிவைப் பெற்றவர்களிடமும், படியாத பாமர மக்களிடமும் பரப்பி ஒரு சிறந்த சேவை செய்ய இந்தப் பணம் செலவழிக்கப்பட வேண்டுமென்பதுதான் என் போன்றோருடைய நோக்கமும், கருத்துமாகும், ஆகவே, கோயில்களிலே இருக்கும் பணம் பெரும்பகுதியும் கோயில் நிர்வாகச் செலவுக்காகச் செலவழிக்க வேண்டுமென்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். காரணம் என்னவென்றால், நம்முடைய அரசாங்கமானது இத்தகைய சட்டங்களைக் கொண்டு வரும்போது ஒரு குறிப்பிட்ட அளவுதான் பூசை முதலியன செய்யப் பணம் ஒதுக்குகிறார்கள். அதன் காரணமாகப் பல விழாக்கள் நல்லபடி நடப்பதில்லை.